# யாழ். மாவட்டத்தில் குமார்


விசேடபதிப்பு ★ விலை ரூபா 1-00

ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஐப்பசி 4 முஹற 3 இதழ் 250

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 21—10—'82


## 87,263 வாக்குகள் பெற்றுர்!



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் 87,263 வாக்குகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

சுதந்திரக் கட்சி வேட்பாளர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவா 77,300 வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன 47,780 வாக்குகளைப் பெற்று மூன்றுமிடத்தைப் பெற்றுள்ளார்.

திரு. ஹெக்டர் கொப்பேகடுவாவுக்கு கோப்பாய்த் தொகுதியிலேயே கூடுதலான (13,768 வாக்குகள் கிடைத்துள்ளன. திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவுக்கு, யாழ்ப்பாணத் தொகுதியிலேயே (6.490) கூடுதல் வாக்குகள் கிடைத்துள்ளன. திரு. குமார் பொன்னம்பலத்திற்கு கிளிநொச்சித்

(3ம் பக்கம் பார்க்க)

★ நேற்று நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்

# ஜயவர்த்தன முன்னணியில்!

# 2-ம் இடம் ஹெக்டர்; குமார்-3

## அகில இலங்கை ரீதியில்

## ரேகணவுக்கு கணிசமான வாக்குகள்



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நேற்று நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் (இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை) இன்று நண்பகல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட முடிவுகளில் 14 மாவட்டங்களில் 13 மாவட்டங்களில் ஐ. தே. கட்சி வேட்பாளர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன முன்னணியில் திகழ்கிறார். இவருக்கு அடுத்த இடத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. ஹெக்டர் கொப்பேகடுவ வகித்து வருகிறார். இதுவரை அறிவிக்கப்பட்ட முடிவுகளில் அ. இ.த. காங்கிரஸ் வேட்பாளர் திரு.ஜி.ஜி. பொன்னம்பலம் மூன்றுவது இடத்தைப் பெற்றுள்ளார். மக்கள் விடுதலை முன்னணி வேட்பாளர் திரு. ரேகணவிஜேவீர அகிலஇலங்கை ரீதியாக கணிசமான வாக்குகளைப் பெற்றுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் நேற்று சுமுகமாக நடந்த போதிலும் வாக்களிப்பு நேரத்தின் பின்னர் நாட்டின் சில பகுதிகளில் வன்செயல் தலைதூக்கியது இதனைத்தொடர்ந்து நேற்று இரவு அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது.

### முதல்முடிவு

தேர்தல்முதல் முடிவு இன்று அதிகாலை ஐந்து மணிக்கு அறிவிக்கப்படும். என்று எதிர் பார்க்கப்பட்ட போதிலும் இன்று காலை ஆறுமணி இருபது நிமிடமளவில் முதல் முடிவு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

மொனருகலை மாவட்டத்தின் முடிவே முதலில் அறிவிக்கப்பட்டது அதனைத்தொடர்ந்து பதுளை மாத்தளை அறிவிக்கப்பட்டன.

## மட்டக்களப்பில்

## ஐ.தே.க. முதலிடம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் திரு,ஜே ஆர். ஜெயவர்த்தனவுக்கு ஐ.தே.க., 48, 094 வாக்குகளும், திரு. குமார் பொன்னம்பலத்திற்கு 47,095 வாக்குகளும் கிடைததுள்ளன. திரு. ஹெக்டர் கொப்பேகடுவவுக்கு 21,688 வாக்குகளும் கிடைத்துள்ளன. திரு. கொல்வின் ஆர். டி. சில்வா 1,?94, திரு. வாசுதேவ நாணயக்கார 618, திரு. ரோகண விஜேவீர 1287.

### மட்டக்களப்பு தொகுதி

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 24, 220 |
| ஹெக்டர் கொப்கேடுவ | 9,924 |
| குமார் பொன்னம்பலம் | 19,342 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 438 |
| வாசுதேவ நாணயக்கார | 127 |
| ரோகண விஜேவீர | 638 |

### தபால் மூலம் வாக்களிப்பு

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன | 795 |
| ஹெக்டர் கொப்பேகடுவ | 287 |
| குமார் பொன்னம்பலம் | 589 |

[3ம் பக்கம் பார்க]

## 'சுதந்திரன்' அலுவலகம் 'சீல்' வைக்கப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

அவசரகாலச்சட்டத்தின் கீழ் "சுதந்திரன்" பத்திரிகைகாரியாலயம் பொலிசாரால் 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.

அவசர காலச்சட்டத்தின் கீழ் நேற்றுமுன்தினமிரவு சீல் வைக்கப்பட்டுள்ளது.

"சுதந்திரன்" பத்திரிகை காரியாலயம இராணுவத்தினரின் பாதுகாப்புக்குட்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றிரவு சுமார் பத்தரை மணியளவில் மேற்படி அலுவலகம் 'சீல்' வைக்கப்பட்டபோது ஊழியர்கள் எவரும் அங்கிருக்கவில்லை.

## மாவட்டரீதியில்

## தேர்தல் முடிவுகள்

### மொனருகலை மாவட்டம்

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன | 51,264 |
| ஹெக்டர் கொப்பேகடுவா | 44,115 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 882 |
| வாசுதேவ நாணயகாரா | 22[illegible] |
| ரோகண விஜயவீரா | 7171 |
| குமார் பொன்னம்பலம் | 163 |
| மொத்த வாக்கு | 1,26 553 |
| செல்லுபடியானவை | 1,03811 |
| கழிவு | 1552 |

### பதுளை மாவட்டம்

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன | 1,41,062 |
| ஹெக்டர் கொப்பேகடுவா | 88,462 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 2115 |
| வாசுதேவ நாணயகாரா | 463 |
| ரோகண விஜயவீரா | 7713 |
| குமார் பொன்னம்பலம் | 625 |
| மொத்தவாக்கு | 2,80,187 |
| செல்லுபடியான வாக்குகள் | 2,40,440 |
| கழிவு | 2982 |

### மாத்தளை மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 94,031 |
| ஹெக்டர் கொபபேகடுவா | 59,299 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 866 |
| வாசுதேவா நாணயகாரா | 196 |
| ரோகண விஜயவீரா | 7169 |
| குமார் பொன்னம்பலம் | 253 |
| மொத்த வாக்கு | 1,87,276 |
| செல்லுபடியானது | 1,61,814 |
| கழிவு | 1414 |

(3ம் பக்கம் பார்க்க]

### மணிவாக்கு

மனிதன் அடையக் கூடிய உயர்ந்த பொருள் அறிவு என்பர்; ஆனல் அது மட்டுமல்ல, அறிவினுள் கலந்த அனுதாபமே உயர்ந்தது.

—தோரே

# நமது நோக்கு

## (கற்)பனை அபிவிருத்தி

தமிழன் தலை நிமிர்ந்து நிற்பதற்கு பனையை முன் மாதிரியாகப் படைத்தவன் 'பனங்காட்டுரோன்' – பரமசிவம்; அவனையே அண்ணுந்து பார்த்தவண்ணம் நிலைத்து நிற்கும் தரு பனை.

இதனை இன்று எமது மக்களுக்கு நினைவூட்ட வந்தவர் தமிழக அரசு பனைஅபிவிருத்திச் சபையின் முதல்வர் திரு கே. சம்பந்தம்.

இலங்கை பனம் பொருள் அபிவிருத்திச்சபை தொடங்கிய நீண்ட பயணம் கற்பனை அபிவிருத்தியில் இன்றும் காணப்படுவது கவலைக்குரியது.

பனம் பொருள் அபிவிருத்திபற்றி விசாலமான அறிக்கை தயாரிக்கவே தமிழகம் சென்ற நாம், இன்றும் தமிழக பனை அபிவிருத்தித் தலைவரின் ஆலோசனை கேட்கும் நிலையில் நகர்ந்து செல்வது, எமது தேசிய உணர்வின் தட்டுப்பாட்டை நிரூபிக்கின்றது.

நாம் ஒரு கதைக்காரக் கூட்டம்! சருத்தரங்குகளில் எம்மை வெல்ல உலகில் வேறெவரும் உண்டா?

நம் முன்னேர் எங்கள் பலரின் நினைவுக்கெட்டக்கூடிய காலத்திலே பனையை நம்பி வாழ்ந்தனர்; அவர்களிற் பலர் வடக்கே போகும் வழக்க முடையவர்கள்; தில்லை நடராஜனைத் தரிசிக்க.

நாம் மேற்கே போவதில் உறுதி கொண்டுள்ளோம்; எனவே பனம்பொருள் அபிவிருத்தி பேச்சில் தவழ்கின்றது வியப்பல்ல.

தமிழகத்தில் பத்து லட்சம் பெண்கள் தும்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளதாக திரு. சம்பந்தம் தெரிவிக்கின்றார். ஆனல் எமது நாட்டில் ஓலை, தும்பு முதலானவை வீணே போவதைக் கண்டு அவர் கவலைப் படுகின்றார்.

தும்பு அடிப்பதென்றால் அது மறியற்காரரின் தொழில் என்றொரு அருவருப்பு; சுமார் அறுபது வருடங்களுக்கு முன், யாழ்ப்பாணப் பனம் தும்புக்கு பெரும் கிராக்கி இருந்தது, எமக்கு நினைவில் வருகின்றது; ஏற்றுமதி செய்தோம்.

அன்று தும்பு அடித்து பிழைத்தவர்களின் சந்ததியினர் இன்று 'லோங்ஸ்' அணிந்து 'வமபுதும்பு' பேசிபடம் பார்ப்பதில் இன்பம் அடைகின்றனர்.

இரண்டாவதாக பனை என்றால் கள்ளு எமக்கு சவர்ச்சி ஊட்டுகின்றது. தமிழக அனுபவம் பதநீரையே பெரும் பானமாக மதிக்கின்றது. வைத்திய நிபுணர்கள் பதநீரின் பெருமைபற்றி நல்ல ஆய்வு செய்துள்ளனர்; வளரும் பிள்ளைகளுக்கு அது ஒரு சத்துள்ள உணவென்பது நிலை நாட்டப்பட்டிருக்கிறது

பனம் கருப்பட்டி, வெல்லம், பனஞ்சீனி, மேனாட்டு சீனி உற்பத்தியாளர்களைக் கவர்ந்திருக்கின்றன; இக்கரை மாட்டுக்கு அக்கரை இன்னும்பச்சையாகத்தானிருக்கிறது.

பனங்கிழங்கு–அதன் ஒடியல் முதலிய உணவுப் பொருட்கள் தென்னிலங்கையில் எவ்வளவு மதிப்புப் பெற்றிருக்கின்றன வென்பது நாமறிந்த விடயம்.

ஆண்களும் பெண்களும் இவ்வித உற்பத்தியில் பெருமளவுக்கு ஈடுபடும் விசாலமான திட்டத்தை துரிதப் படுத்தினல் நாம் பொருளாதார தன்னிறைவும், வாழ்க்கை முறையில் ஒரு தேசிய நோக்கும் விருத்தி செய்ய உதவலாம்,

அரசியல் 'சனியன்' அகற்றப்பட்டாலொழிய, அபிவிருத்தி இன்று போல் என்றும் தடங்கல் நிலையில் தொடரவே செய்யும்.

## இந்தியாவுக்கு ஒரு சவாலும் சந்தர்ப்பமும்

ஏழாவது அணிசேரா மாநாடு வருகிற மார்ச் மாதம் புதுடில்லியில் நடைபெறுவது நிச்சயமாய்விட்டது

அணிசேராக் கொள்கை பற்றி பல சிக்கல்களும் தில்லுமுல்லுகளும் மாநாட்டில் காணப்படுகின்றன.

அபிவிருத்தியடைந்த மேனுடுகள் குறிப்பாகஅமெரிக்கா அணிசேரா இயக்கத்தில் எவ்வித ஆசையும் கொண்டவையல்ல, வறுமையில்வாடும் நாடுகள் தலை நிமிர்த்தமுடியுமானல் தங்களுடைய செல்வநிலை பாதிக்கப்படுமென்ற ஒரு ஆதாரமற்ற அச்சம், தங்கள் செல்வாக்கு குறையுமென்ற ஒருநம்பிக்கை; நிச்சயமாக முதலாளித்துவ நாடுகள், அணிசேரா இயக்கத்தை கேலிபண்ணி வருவது ஒரு ரகசிய நிகழ்ச்சி ஆதிக்கப் போட்டிக்கு மண்டல சார்பற்ற தத்துவம் உண்மையில் தடையே!

சோஷலிச நாடுகள் – கம்யூனிஸ்ட் ரஷ்யா, நவசீனு வெளிவெளியாக இந்த இயக்கத்துக்கு ஆதரவும் உதவியுமளிக்கச் சித்தமாயுள்ளன.

இந்தியப் பிரதமர் இந்திராவுக்கு இன்று நாட்டிலும் வெளியிலும் பல பகைமைச் சத்திகள் தொழிற்படுகின்றன; இருப்பினும் இந்திராவின் அரசியல் சாமர்த்தியம் இவற்றை சமாளிக்கவல்லது.

அமெரிக்காவுக்கு முன்பும் ரஷ்யாவுக்கு பின்பும் விஜயம் செய்த இந்தியப் பிரதமர், இந்திய தேசம், எந்த வல்லரசுக்கும் வால் பிடிக்கும் போக்குடையதல்ல வென்பதை நன்றாகவிளக்கியுள்ளார்.

பாகிஸ்தானின் பகைமைக்கும் சீனவின் எல்லைப் புற சச்சரவுகளுக்கும் சாந்தம் அளித்து, அணிசேராக் கொள்கையை நிதானமாகக் கடைப்பிடிப்பதில் இந்திரா வெற்றி கொண்டுள்ளார்.

எனவே பக்கம் சாயும் நாடுகள் இவ்வியக்கத்தில் ஏற்படுத்தும் குழப்பத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் சாதுர்யமும் ஆக்க பூர்வமான கொள்கைகளை நிறைவேற்ற செல்வ நாடுகளின் ஒத்தாசையை சம்பாதிக்கும் சந்தர்ப்பமும் இந்தியாவின் கையிலுண்டு.

# பாரதிதாசன் கண்ட மகாகவி பாரதியார்

பாரதிதாசன் பாரதியை முதனமுதலில் கண்ட வரலாறு சுவையானது; பாரதிதாசன் புதுவையில் வாழ்ந்துவந்தவர். பாரதியைக் காண்பதற்கு முன்னமேயே அவருடைய பாடல்களில் அதிக காதல் கொண்டிருந்தார் கவிஞரிடம் பாரதி புதுவையில் வெளியிட்ட 'ஜன்மபூமி' என்ற சுதேச கீதங்களின் [இரண்டாம் பகுதி) பிரதி இருந்தது. அதிலிருந்த அத்தனை பாடல்களும் அவருக்கு மனப்பாடமாயிருந்தன.

-- எதிரொலி விசுவநாதன் --

1909ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஒருநாள் கவிஞருடைய உடற்பயிற்சி ஆசிரியரான வேணுநாயக்கருக்கு புதுவையில் திருமணம் நடந்தது. அந்தத் திருமண நிகழ்ச்சியில் கவிஞர் தாம் அறிந்த பாரதியாரின் வந்தேமாதரப் பாடல்களை வாய்விட்டுப் பாடிக்கொண்டிருந்தார். அப்போது கூட்டத்தில் ஒருவராய் பாரதியும் கேட்டுக்கொண்டிருந்தார். அந்தத் திருமண நிகழ்ச்சிக்கு பாரதி வந்திருந்ததை கவிஞர் அறியமாட்டார். பாடி முடிந்தபின்னர் அன்பர்கள் பாரதியை கவிஞருக்கு அறிமுகம்செய்துவைத்தார்கள்.

தாம் இத்தனைநாளும் ரசித்துப் பாடிய வீரப்பாடல்களை இயற்றிய பாரதியைக்கண்ட மாத்திரத்தில் கவிஞர் விதிர் விதித்துப்போனர். பின்னர் பாரதியுடன் நெருங்கிப் பழகலானர் தாம் தமிழ் கற்றுக் கொண்டிருந்த திருப்புளிச்சாமி, பங்காரு பத்தர், பெரிய சாமிப்பிள்ளை ஆகியோரை விடப் பாரதியிடம் அதிகம் ஈடுபடலானர். இருவரிடையே பிறந்த நட்பு நிறையும் பிறையின் நெருங்கும் முனைகளாயிற்று. பாரதியைப் பின்பற்றும் இரண்டாவது நிழலாகக் கவிஞர் மாறினர்.

### பாரதியின் வாரிசு

கவி எழுதும் திறமை நண்பருக்கு இயற்கையிலேயே கைவந்திருந்ததைக் கண்டு கொண்ட பாரதி கவிஞரைப் 'பாடு' என்று ஊக்கப்படுத்தினர், உற்சாகமூட்டினர். அதனோடு நிற்காமல் பாராட்டவும் செய்தார். ''ஸ்ரீசுப்பிரமணிய பாரதியாரின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்புரத்தினம் என்று தம் கைபட எழுதிக் கவிஞருடைய கவிதையை சுதேசமித்திரன் பத்திரிகைக்கு அனுப்பிவைத்தார். இப்படிச் செய்ததன் மூலம் தம வாழ்நாளிலேயே பாரதி தமக்கு வாரிசான கவிஞரையும் சுட்டிக்காட்டிவிட்டார்.

### வழிவேறு

பாரதி காட்டிய வழிவேறு, பாரதிதாசன் கடைப்பிடித்த வழிவேறு என்பது பலருடைய எண்ணம். குருநாதன் வேறு, குறிக்கோள் வேறு என்ற கொள்கையை அவர் கொண்டிருக்கலாம். அவர் நாத்திகக் கவிஞராக விளங்கியது ஆத்திகர் பலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆம்; அவர் ஆத்திகர் பலரைத் தாக்கியதுண்டு. தகுதிவாய்ந்த தமிழ்ப் புலவர் பலரை அந்த வெறுப்பால் பழித்ததும் உண்டு, என்றாலும் பிறப்பால் பிராம்மணரான பாரதியைத் தம் கடைசி மூச்சுவரை 'ஐயர்' என்றே சிறப்பாகக் கொண்டாடினர் தம் இறுதிக்காலத்தில் பாரதியின் பெருமையைப் பார் அறியவேண்டும் என்ற பேரவாவினல் உந்தப்பட்டுப் பேசும்படமும் எடுக்கத்துணிந்தார். பாரதியின் பெருமையைப் பரப்பும் முயற்சியிலேயே தம் தண்ணை மூடினர்.

பாரதியைப் போலவே பாரதிதாசனும் பெரும் கவிஞரே என்றாலும் அவர் தம் போர்க்கவிதைக்குரிய ஆயுத பாதையை பாரதியிடமிருந்தே பெற்றுக்கொண்டார். இதனை, பாடலிற் பழமுறை பழநடை எளிபததோர் காடுமுழுதும் கண்டபின் கடைசியாய் சுப்பிரமணியபாரதி தோன்றி என்பாட்டுக்குப் புதுமுறை, புதுநடைகாட்டினர்'' என்று என்று அவரே எழுதிக்காட்டியிருக்கின்றார். தமகு முதலில் ஒளிகொடுத்த தீரக்கவிஞன் பாரதியை எந்தநாளும் பாரதிதாசன்மறந்தவரில்லை. அவரை நன்றியுடன் நினைத்துப்போற்றவும் அவர் தவறவில்லை.

பாரதியின் மறைவுக்குப்பின் பாரதியின் உலகக் கண்ணேட்டத்தை மறைக்கும்வகையிலும். பாரதி மகாகவி என்பதை மறைக்கும்வகையிலும் எழுத்தாளர் சிலர் சேர்ந்து செயற்பட்டபோது, பாரதிதாசன் சிங்கமெனச் சிலித்துச் சீறி எழுந்தார். அப்பொழுது அவருடைய எழுதுகோல்எரி யீட்டியாக மாறியது. குருபக்தி கோபாவேசம் கொண்டது. அப்போதுதான் புரட்சிக்கவிஞரின் பேனு 'மகாகவி' என்ற மகத்தான பாடலை பாரதிக்கு அஞ்சலியாகச் செலுத்தியது.

பாரதி யார்? உனக்கும் ஊருக்கும் பாடிய உள்ளூர்க் கவிஞரா? ஒட்டைச்சாண் நினைப்புடையஒருவரா? இல்லை. அவர் உலகமகாகவிகளில் ஒருவர் கவிஞ ஒருவரிடம் உலகம் எதிர்பார்க்கிற கவிதாசக்தி, கருத்துவளம், அதை வெளிப் படுத்தும் முறை ஆகிய அத்தனை திறமைகளும் ஒருங்கே சேரப்பெற்ற ஒப்பற்றகவிஞர், அவர் வெறும் காகிதக் கவிஞரா. இல்லை! கர்மவீரருங்கூட அவர் அகத்தில் அரும்பும் எண்ணங்கள் எப்படிப் பட்டவை தெரியுமா? அவை அவனியின் இன்னல் அலுப்பன அத்தனையும் புத்தம்புதியன அச்சத்தைவேரோடு சுட்டுப் பொசுக்குவன அவருடைய உள்ளம் விரிந்தது. அது அன்புள்ளம் இன்ப உள்ளம். அனைவரும் சமம் என்னும் ஆகாய உள்ளம்.

''தராதலத்துப் பாஷைகளில் அவர் தந்த பாட்டை மொழிபெயர்த்தால் தெரியும்சேதி'' என்றுஎக்காளமிட்டார் கவிஞர். ஞானரதம் போல இயற்றமிழ் நூல் என்றும் கண்ணன் பாட்டைப் போல இசைத்தமிழ் நூல்என்றும் பாஞ்சாலிசபதம் போல நாடகத்தமிழ்நூல் என்றும் எழுதித்தர நானிலத்தில் யாவர் இருக்கின்றார்கள்? என்ற ஆணித்தரமான வினவைத் தொடுக்கின்றார் பாரதிதாசன்.

பொதுவாக கவிஞர்கள் மற்றக் கவிஞர்களின் கவிதையில் குற்றமும் குறையும் கண்டு பிடிப்பார்களே தவிர இன்னொரு கவிஞரை இாலசில் பாராட்டிவிட மாட்டார்கள். கவிஞர்களின் இயல்பு இப்படியிருக்க பாரதிதாசன் பாரதியை வானளாவப்புகழ்ந்து உரைத்தது வெறும் முகமனன்று கவிஞர். ஒருவர்மற்றொரு கவிஞருக்குரிய செம்மைநலத்தை இவ்வாறு குறிப்பாரேல் நாம் அப்படியே ஏற்கவேண்டியது தான். பாரதியின் கவிதைக் கோபுர கலசத்தைப் பாரதிதாசன் நெருங்கிக் கண்டவரல்லவா. [நன்றி மஞ்சரி]

## துர்க்கா தோத்திரம்

வெற்றியந் திருவே போற்றி
வீரநற் பரையே போற்றி
கற்பகக் கனியே போற்றி
கரத்துறு களியே போற்றி
சிற்பரத் தமைவே போற்றி
சிவந்தரு விளேவே போற்றி
தற்பர விளக்கே போற்றி
சண்டிகா போற்றி போற்றி

ஆற்றலுக் கரணே போற்றி
அகமுறு மமுதே போற்றி
தேற்றலின் தெளிவே போற்றி
சிறந்தசிற் பரையே போற்றி
மாற்றமில் மருந்தே போற்றி
மயக்கறு மணியே போற்றி
சாற்றரு தகவே போற்றி
சண்டிகா போற்றி போற்றி

நோற்பவர் நோக்கே போற்றி
நூற்றுறை நிறைவே போற்றி
போற்றுயர் போற்றே போற்றி
புறமக மில்லாய் போற்றி
தோற்றுவான் மறையே போற்றி
துகளறு சுகமே போற்றி
சாற்றுபூ ரணமே போற்றி
சண்டிகா போற்றி போற்றி

துந்துபி முழக்கே போற்றி
துணைவரு துணையே போற்றி
நந்தலில் நலனே போற்றி
நயம்படு முறையே போற்றி
அந்தமி லாளே போற்றி
அடிதொழு மமுதே போற்றி
சந்தத மருள்வாய் போற்றி
சண்டிகா போற்றி போற்றி.

- ச. தங்கமாமயிலோன்

# யாழ். மாவட்ட.... மாவட்ட ரீதியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொகுதியிலேயே கூடுதலான [9,822] வாக்குகள் கிடைத்துள்ளன. தபால் வாக்களிப்பிலும் திரு. குமார் பொன்னம்பலத்திற்கே கூடுதலான [1598] வாக்குகள் கிடைத்துள்ளன

யாழ். மாவட்டத்திலுள்ள பதினொரு தொகுதிகளின் வாக்கு விபரம்:-

### வட்டுக்கோட்டை

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன [ஐ. தே. க.] | 3,700 |
| ஹெக்டர் கொப்பேகடுவா [சு. க.] | 7,770 |
| குமார் பொன்னம்பலம் [த. கா.] | 9,741 |
| வாசுதேவ நாணயக்கார [ந. ச.] | 254 |
| கொல்வின் ஆர். டி. சில்வா [ ச. க.] | 257 |
| ரோகண விஜேவீரா [ம. வி. மு.] | 380 |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன [ஐ. தே. க.] | 6,490 |
| ஹெக்டர் கொப்பேகடுவ [சு. க.] | 3 758 |
| குமார் பொன்னம்பலம [த. கா. ] | 9,319 |
| வாசுதேவ நாணயக்காரா [ந. ச. ] | 196 |
| கொல்வின் ஆர். டி. சில்வா ( ச. க.] | 134 |
| ரோகண விஜேவீரா (ம. வி. மு.] | 176 |

### ஊர்காவற்றுறை

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன (ஐ. தே. க.) | 4,065 |
| ஹெக்டர் கொப்பேகடுவா (சு. க.] | 3,392 |
| குமார் பொன்னம்பலம் (த. கா. ] | 8,353 |
| வாசுதேவ நாணயக்காரா [ந. ச.] | 98 |
| கொல்வின் ஆர். டி. சில்வா [ ச. க ] | 157 |
| ரோகண விஜேவீரா [ம. வி. மு.] | 119 |

### கோப்பாய்

| | |
|---|---|
| ஜே ஆர் ஜெயவர்த்தன [ஐ. தே. க.] | 3,546 |
| ஹெக்டர் கொப்பேகடுவ [சு. க.] | 13,768 |
| குமார் பொன்னம்பலம் (த. கா.] | 4,98 |
| வாசுதேவ நாணயக்கார [ந. ச.] | 182 |
| கொல்வின் ஆர். டி. சில்வா [ச. க.] | 423 |
| ரோகண விஜேவீரா [ம. வி. மு.] | 379 |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன (ஐ. தே. க.) | 3629 |
| ஹெக்டர் கொப்பேகடுவ (சு. க.] | 6127 |
| குமார் பொன்னம்பலம் (த, கா.) | 9742 |
| வாசுதேவநாணயக்கார (ந. ச.) | 125 |
| கொல்வின் ஆர். டி' சில்வா (ச. க. ) | 4 9 |
| ரோகணவிஜயவீரா (ம. வி. மு.) | 204 |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன (ஐ. தே. க.) | 3199 |
| ஹெக்டர் கொப்பேகடுவ (சு. க.) | 6343 |
| குமார் பொன்னம்பலம் (த. கா.) | 5367 |
| வாசுதேவநாணயக்கார (ந. ச.) | 181 |
| கொல்வின் ஆர். டி. சில்வா (ச. ச) | 150 |
| ரோகணவிஜயவீரா (ம.வி. மு.) | 217 |

### கிளிநொச்சி

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன (ஐ. தே. க.) | 3616 |
| ஹெக்டர் கொப்பேகடுவ (சு.க.) | 4188 |
| குமார் பொன்னம்பலம் (த. கா.) | 9822 |
| வாசுதேவநாயக்கார (ந. ச.) | 102 |
| கொல்வின் ஆர். டி. சில்வா (ச. க.) | 171 |
| ரோகண விஜயவீரா (ம. வி. மு.) | 188 |

### காங்கேசன்துறை

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன (ஐ. தே. க.) | 3771 |
| ஹெக்டர் கொப்பேகடுவ (சு. க.) | 9523 |
| குமார் பொன்னம்பலம் (த. கா.) | 6065 |
| வாசுதேவநாணயக்கார (ந. ச.) | 184 |
| கொல்வின் ஆர். டி. சில்வா (ந. ச.) | 310 |
| ரோகணவிஜயவீரா [ம. வி. மு.) | 34. |

### மானிப்பாய்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜயவர்த்தன (ஐ. தே. க.) | 4488 |
| ஹெக்டர் கொப்பேகடு (சு. க.) | 9008 |
| குமார் பொன்னம்பலம் (த. கா.) | 7514 |
| வாசுதேவ நாணயக்காரா (ந. ச.) | 298 |
| கொல்வின் ஆர். டி. சில்வா [ச. க.] | 483 |
| ரோகண விஜயவீரா (ம. வி. மு.] | 559 |

### நல்லூர்

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன ஐ. தே. க.] | 4831 |
| ஹெக்டர் கொப்பேகடுவ [சு. க.] | 4330 |
| குமார் பொன்னம்பலம் [த. கா.] | 8979 |
| வாசுதேவ நாணயக்காரா [ந ச.] | 243 |
| கொல்வின் ஆர். டி. சில்வா [ச. க.] | 332 |
| ரோகண விஜயவீரா [ம. வி. மு ] | 24[illegible] |

### உடுப்பிட்டி

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன [ஐ. தே. க.] | 2282 |
| ஹெக்டர் கொப்பேகடுவ [சு க.] | 8155 |
| குமார் பொன்னம்பலம் த. கா. | 5179 |
| வாசுதேவ நாணயக்கார [ந. ச ] | 224 |
| கொல்வின் ஆர் டி. சில்வா [ச. க.] | 353 |
| ரோகண விஜயவீரா [ம. வி. மு.] | 208 |

### தபால் வாக்குகள்

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன [ஐ தே. க.[ | 1253 |
| ஹெக்டர் கொப்பேகடுவ [சு. க ] | 1431 |
| குமார் பொன்னம்பலம் [த. கா,] | 1593 |
| வாசுதேவ நாணயக்காரா [ந. ச.] | 127 |
| கொல்வின் ஆர். டி. சில்வா [ச. க ] | 120 |
| ரோகண விஜயவீரா [ம. வி. மு.] | 111 |

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### திருகோணமலை மாவட்டம்

| | |
|---|---|
| ஜே ஆர். ஜெயவர்த்தன | 45,522 |
| ஹெக்டர் கொப்பேகடுவ | 31,700 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 635 |
| வாசுதேவ நாணயக்காரா | 276 |
| ரோகணவிஜயவீரா | 5395 |
| குமார் பொன்னம்பலம் | 10,068 |
| மொத்தவாக்குகள் | 1336 5 |
| செல்லுபடியானவை | 93,596 |
| கழிவு | 1795 |

### மட்டக்களப்பு மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 48094 |
| ஹெக்டர் கொப்பேகடுவ | 21, 88 |
| கொல்வின் ஆர், டி. சில்வா | 1294 |
| வாசுதேவநாணயக்கார | 618 |
| ரோகண விஜயவீரா | 1287 |
| குமார் பொன்னம்பலம் | 47,095 |
| மொத்த வாக்குகள் | 1,72480 |
| செல்லுபடியானவை | 1,20,076 |
| கழிவு | 2879 |

### மாத்தறை மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 1,64,725 |
| ஹெக்டர் கொப்பேகடுவ | 1,44,587 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 1571 |
| வாசுதேவ நாணயக்கார | 509 |
| ரோகண விஜயவீரா | 22,117 |
| குமார் பொன்னம்பலம் | 474 |
| மொத்தவாக்குகள் | 399.8 |
| செல்லுபடியானவை | 3,33,983 |
| கழிவு | 3091 |

### யாழ்ப்பாண மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 47,780 |
| ஹெக்டர் கொப்பேகடுவா | 77,300 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 3,376 |
| வாசுதேவ நாணயக்கார | 2,186 |
| ரோகண விஜேவீரா | 3,098 |
| குமார் பொன்னம்பலம் | 87,2 3 |
| மொத்த வாக்குகள் | 4,93,705 |
| செல்லுபடியானவை | 2,18,003 |
| கழிவு | 10,610 |

### வன்னி மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 32,834 |
| ஹெக்டர் கொப்பேகடுவா | 23,221 |
| கொல்வின் ஆர் டி. சில்வா | 584 |
| வாசுதேவா நாணயகாரா | 293 |
| ரோகண விஜயவீரா | 2286 |
| குமார் பொன்னம்பலம் | 11 521 |
| மொத்த வாக்கு | 1,19,092 |
| சொல்லுபடியானவை | 70,739 |
| கழிவு | 2447 |

### பொலன்நறுவ மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 59,414 |
| ஹெக்டர் கொப்பேகடுவா | 37,243 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 451 |
| வாசுதேவா நாணயக்காரா | 141 |
| ரோகண விஜயவீரா | 8,138 |
| குமார் பொன்னம்பலம் | 228 |
| மொத்த வாக்கு | 1,27,624 |
| செல்லுபடியானவை | 1,05,614 |
| கழிவு | 1,065 |

### புத்தளம் மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெவவர்த்தன | 1,28,877 |
| ஹெக்டர் கொப்பேகடுவா | 80,006 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 1040 |
| வாசுதேவா நாணயகாரா | 239 |
| ரோகண விஜயவீரா | 7001 |
| குமார் பொன்னம்பலம் | 817 |
| மொத்த வாக்கு | 2,67,675 |
| செல்லுபடியானவை | 2,17,980 |
| கழிவு | 1,085 |

### அனுராதபுரம் மாவட்டம்

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 1,17,873 |
| ஹெக்டர் சொப்பேகடுவ | 1,02 973 |
| கொல்வின் ஆர். டி சில்வா | 1,148 |
| வாசுதேவ நாணயக்கார | 396 |
| ரோகண விஜயவீரா | 13,911 |
| குமார் பொன்னம்பலம் | 222 |
| மொத்த வாக்குகள் | 2 78,594 |
| செல்லுபடியானவை | 2,36,52[illegible] |
| கழிவு | 2,294 |

## கந்தபுராண மாநாடு

(யாழ்ப்பாணம்)

கந்தபுராணச் சிறப்புமாநாடு இ மாதம் 30, 31-ந் திகதிகளில் கீரிமலை நகுலேஸ்வரர் கோவில் மண்டபத்தில் நடைபெறும். கீரிமலை சிவநெறிக் கழகத்தால் நடாத்தப்படும். மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கு பண்டிதர் இ. நமசிவாயம் தலைமை தாங்குகின்றார்.

(உ)

## நாளைய பலன்

ஐப்பசி மாதம் 5-ம் திகதி வெள்ளிக்கிழமை (22—10—82)

மேடம்: புதிய பாதையொன்று உங்களை எதிர்நோக்கியுளது. நீண்டநாள் பிணி இன்று நிவர்த்தியாகலாம் புத்திர வழியால் மனதிற்குதிருப்தியும் ஏற்படும்.

இடபம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும். உதவி செய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக்கொள்வீர்கள் இன்று அமைதியே நன்று.

மிதுனம்: பொன்னன சந்தர்ப்பம் ஒன்று உங்களைப் பூரிக்கச் செய்யும். தேடிய உறவு முறைகள் நாடியே வரலாம். இளம் பருவத்தினருக்கு இன்று இன்பப் பூங்கா பறந்து வரும்.

கடகம்: தொல்லைகள் தலை தூக்கும். தொழில் புரியும் இடத்தில் ஏமாற்றத்துக்கு இடமுண்டு. அவசர முடிவைத் தவிர்த்துக் கொள்ளவும்.

சிங்கம்: நீண்டநாள் கனவு இன்று நினைவாகும் பெரியவர்களின் உதவி தாராளமாகக் கிடைக்கும். இன்று புண்ணிய விருப்பும் மேலிடும். சுப தினம்.

கன்னி: தொழில் துறையில் வெற்றி. விருந்தினர்கள் வருகை வேடிக்கையாக இருக்கும். இதயப் படுதாவில் இந்பத்தின் மின்னல்.

துலாம்: இலட்சியப் பாதையை நோக்கி இன்று பயணம் ஆரம்பமாகும். எதிர்பார்த்த பொருள் கிடைக்கலாம் பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும்.

விருச்சிகம்: நடையில் தயக்கம் ஏற்படும். உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும். உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம்.

தனு: கவலையின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள். உடல் நலமும் பாதிக்கப்படலாம். அவசர போக்கையும் ஆத்திர உணர்ச்சியையும் தவிர்த்துக்கொள்ளவும்.

மகரம்: இதயம் இன்பத்தால் விம்மும். இல்லத்தில் இனிமை தழுவும். உறவினர்கள் மத்தியில் செல்வாக்கும் இன்று வளரும்.

கும்பம்; அவசரகோலம் சிக்கலைத் தோற்றுவிக்கும். மனதில் விரக்தி தென்படும். சகோதரவழியால் சஞ்சலதிருக்கும் இடமுண்டு.

மீனம்: அறவளிகளை மனம் நாடும். பொது விவகாரங்களில் ஈடுபடுவதன் மூலம் பொருட்செல்வாக்கும் வளரும் சுற்றாடலில் மதிப்பும் உயரும் இன்று.

சோதிடக்கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

## மட்டக்களப்பில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

| | |
|---|---|
| கொல்வின் ஆர். டி. சில்வா | 21 |
| வாசுதேவ நாணக்கார | 04 |
| ரோகண விஜேவீரா | 34 |

### பட்டிருப்பு தொகுதி

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 7,129 |
| ஹெக்டர் ஹொப்பேகடுவ | 3,484 |
| குமார் பொன்னம்பலம் | 21,913 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 531 |
| வாசுதேவ நாணயக்கார | 229 |
| ரோகண விஜேயவீர | 415 |

### கற்குடாதொகுதி

| | |
|---|---|
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | 15 950 |
| ஹெக்டர் கொப்பேகடுவ | ,993 |
| குமார் பொன்னம்பலம் | 5,251 |
| கொல்வின் ஆர். டி. சில்வா | 304 |
| வாதேவ நாணயக்கார | 258 |
| ரோகண விஜேயவீர | 155. |

## இதுவரை வெளிவந்த பத்து மாவட்டங்களில்

# ஜே. ஆருக்கு எட்டு லட்சம் ஹெக்டருக்கு ஆறு லட்சம்

(கொழும்பு)

இதுவரை வெளிவந்த பத்து மாவட்டங்களின் முடிவின்படி ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் திரு ஜே ஆர். ஜெயவர்த்தனவுக்கு 8 லட்சத்து 13 ஆயிரத்து 603 வாக்குகள் கிடைத்துள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவவுக்கு 6 லட்சத்து 7 ஆயிரத்து 621 வாக்குகள் கிடைத்துள்ளன.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர் திரு. குமார் பொன்னம்பலம் 1லட்சத்து 58 ஆயிரத்து 507 வாக்குகளைப்பெற்றுள்ளார். மற்றைய அபேட்சகர்கள் பெற்ற வாக்குகள் விபரம் வருமாறு:–

திரு. ரோகணவிஜேயவீரா (ஜே. வி.பி) 71 ஆயிரத்து 375 வாக்குகள்.

டாக்டர் கொல்வின் ஆர்.டி, சில்வா [ல. ச ச. க] 12,814

திரு. வாசுதேவ நாணயக்கார (ந, ச, ச, க) 5,147.

## நிலைமையை சமாளிக்க ஆயுதப்படைதயார்!

### ஐ. ஜி.பி. அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் எந்தப் பகுதியிலும் நேற்று அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லையென்று பொலிஸ்மா அதிபர் திரு. ருந்ரா இராஜசிங்கம் நேற்று பிற்பகல் தெரிவித்தார்.

நாடு முழுவதும் சட்டமும், ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

எந்த ஒரு நிலைமையையும் சமாளிக்க கலகத் தடுப்புப் படையும், ஆயுதப்படையும், தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட ஊழியர்களுக்காக விசேட பஸ், ரயில் சேவை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. (க)

## றேயல் கல்லூரியில் எண்ணப்பட்டன

[கொழும்பு]

கொழும்பு மாவட்டத்திலுள்ள 15 தொகுதிகளின் வாக்குப் பெட்டிகள் றேயல் கல்லூரி மண்டபத்தில் எண்ணப்பட்டன.

நேற்றிரவு 8 ,மணிக்கு ஹேமாகம தொகுதி வாக்குச் சீட்டுகள் எண்ணப்பட்டன. 9–15 மணிக்கு கெஸ்பவ தொகுதி எண்ணப்பட்டது. இதைத் தொடர்ந்து மற்றும் தொகுதிகள்எண்ணப்பட்டன.

நேற்றிரவு அமைச்சர் லலித், வின்சன்ட்பெரேரா ஆகியோர் வாக்கு எண்ணும் இடத்திற்கு வந்திருந்தனர். அமைச்சர் ஜனுப் முகமட் இன்று காலை வந்து பார்வையிட்டார்.

கோட்டே தொகுதி வாக்குச்சீட்டு எண்ணும் அறைக்குள், அமைச்சர் ஆனந்த டி சில்வா இரவு முழுவதும் தங்கியிருந்தார்.

## "கிராம பகுதியிலிருந்துதான் நாட்டின் அபிவிருத்தி உயர்த்தப்பட வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

'கிராமப்புறங்களின் வளங்கள் கடந்த பல காலமாக நகரப்புறங்களுக்கே கொண்டு செல்லப்பட்டன. இவை மீண்டும் கிராமப்புறங்களுக்குக் கொண்டுவரப்படவேண்டும். கிராமப்பகுதிகளிலிருந்துதான் நாட்டின் அபிவிருத்தி உயர்த்தப்படவேண்டும்.'

இவ்வாறு வடபிராந்திய சர்வோதய அமைப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு புங்குடுதீவிலுள்ள சர்வோதய பிராந்திய தலைமைச் செயலகத்தில் நடந்த சனசமூகநிலையங்களுக்கான கருத்தரங்கில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

நூற்றுக்கணக்கான சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இக்கருத்தரங்கில் திரு திருநாவுக்கரசு மேலும் பேசுகையில், நாட்டின் நலனுக்கும் கிராமங்களின் நலனுக்கும் இயக்கரீதியாகவும், தனியாகவும் செயற்பட்டுவரும் சமூகசேவையாளர்களை நாம் ஊக்குவிக்கவும், அவர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்து உற்சாகப்படுத்தவும் முன்வரவேண்டும்,

பல சமூக சேவை இயக்கங்களில் போட்டிகள் மூலம் பொறுப்பாளர்கள் தெரிவு செய்யப்படுவதால் உண்மையான சமூக சேவையாளர்கள் பொதுஸ்தாபனங்களில் இடம் பெறுமலும் விடுகின்றனர். சில சமூகசேவையாளர்கள் போட்டிகளைக் கண்டு ஒதுங்கி தனிமனிதராகவும் தனித்து நின்று சேவையாற்றுகின்றனர்

இந்தவிதமாக தனிமனித இயக்கமாக சமூகசேவையில் ஈடுபடும் சேவையாளர்களின் சக்தியையும் நாட்டின் நலனுக்குப் பயன்படுத்த சர்வோதய இயக்கம் வழிவகுத்துள்ளது.

எனவே உண்மையான சேவையாளர்களை, சேவை நலன் விரும்பிகளை ஆர்வமுடன் செயற்படுபவர்களை மக்கள் தொண்டர்களாகக் கணித்து அவர்களது அனுபவம் ஆற்றல்களையும் நாட்டு நலன்களுக்குப் பயன்படுத்த வேண்டும்.

கிராம நலனில் அக்கறையுள்ளவர்களுக்கு முன்னுரிமையும் மதிப்பும் கொடுப்பதன் மூலமே நாம் உண்மையான சமூகசேவைகளைச்செய்ய முடியும். இந்தவகையில் சமூக சேவையாளர்களை ஒன்றிணைப்பதன் மூலமதான நாட்டை அபிவிருத்தியடையச் செய்ய முடியும்.

## மின்குமிழ்கள்

[கரவெட்டி]

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை நெல்லியடி உப அலுவலகப் பகுதியிலுள்ள மின் விளக்குகளில் எரியாத நிலையில் கிடந்த மின் குமிழ்கள் அகற்றப்பட்டு புதிய மின் குமிழ்கள் போடப்பட்டுள்ளன.

★ ஐஸ்கிறீம் வகைகள் ★ மட்டன் றோல்

★ பொம்பே சுவீற்ஸ் ★ பற்றிஸ் ★ கேக்வகைகள்

றிக்கோ

யாழ். நகரில் றிக்கோவுக்கு

வேறு கிளைகள் இல்லை!

ஓடபத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில 1982-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box, 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.